**முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை**
**முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,**
**முதன்மை சார்பு நீதிபதி.**
**MCOP.No.189/2024**

பெயர் : கணேஷ் (PW2)

த/பெ. : ராஜகோபால்

தேதி : 22.01.2026.

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டது.
2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:–

நான் என்ன வழக்கிற்காக சாட்சியம்அளிக்க வந்துள்ளேன் என்றால் விபத்து வழக்கு சம்பந்தமாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். இந்த வழக்கு விபத்தில் இறந்துபோன நபரின் பெயர் தெரியுமா என்றால் தெரியும், அவரது பெயர் செல்வமுத்துக்குமரன் ஆவார். அவர் எனது நண்பரா என்றால் இல்லை. ஒரே தெருவைச்சேர்ந்தவர். இந்த விபத்தானது எந்த இடத்தில் நடந்தது என்றால் குத்தாலம் தாண்டி நடந்தது. விபத்தில் இறந்த நபர் எந்த வாகனத்தில் வந்தார் என்றால் இருசக்கர வாகனத்தில் வந்தார். விபத்தானது சாலையின் வளைவில் நடந்தது என்றால் இல்லை. கொஞ்சம் வளைவான பகுதியாகும். அவர் சாலையை கடக்கும்போது நடந்தது என்றால் இல்லை. விபத்து சமயத்தில் அவர் சென்றுகொண்டிருந்த வாகனத்திற்கு பின்னால் வந்த பேருந்து மோதிதான் இந்த விபத்து நடந்தது. விபத்தினை நான் நேரடியாக பார்க்கவில்லை. விபத்து நடைபெற்று அந்த இடத்தில் கூட்டமாக இருந்தது அதன் பின்னர் தான் சென்று பார்த்தேன் என்றால் சரிதான். நான் சொல்லுவதுபோல் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றாலும் விபத்தில் இறந்த நபர் எனது ஊர்க்காரர் என்பதால் அவருக்கு ஆதரவாக விபத்தினை நேரடியாக பார்த்தேன் என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.